பக்கங்கள்:-17

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 17 | புதன்கிழமை | 31.01.2024 | அதிர்வு 183 |
|---|---|---|---|---|---|

## இரு வெளிநாட்டவர்கள் வாகன விபத்தில் சாவு!



வாகன விபத்தில் இரு வெளிநாட்டவர்கள் பலியாகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் காலி,

06



# எதிரணியின் பேரணி மீது பொலிஸார் வெறியாட்டம்

## பாதிக்கப்பட்டவர்கள் வைத்தியசாலையில்; அரசுக்கு எதிரான போராட்டம் 15 நிமிடங்களிலேயே கலைப்பு





"மாற்றத்தை ஏற்படுத்தும் வருடம் - 2024" எனும் தொனிப்பொருளில் ஐக்கிய மக்கள் சக்தி நேற்றுப் பிற்பகல் கொழும்பில் முன்னெடுத்த எதிர்ப்புப் பேரணி மீது பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

வற் வரி உள்ளிட்ட மக்கள் எதிர்கொண்டு வரும் பல்வேறு பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை வழங்குமாறு அரசை வலியுறுத்தி இந்த எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

06

## கண்ணீர்ப்புகையால் பாதிக்கப்பட்ட முஜிபுர் அவசர சிகிச்சைப் பிரிவில்



ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அரசுக்கு எதிராகக் கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த நேற்றைய ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டபோது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தால் மூச்சுத் திணறல்

06




ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறை இருந்து பின்னர், விடுவிக்கப்பட்டிருக்கும் முருகன், சாந்தன், றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய நான்கு இலங்கையர்களும் இலங்கை மீளுவது தொடர்பில் தமிழரசுத் தலைவராகத் தேர்வாகியிருக்கும் சிறீதரன் எம்.பி. தமிழக முதல்வருக்குக் கடிதம் எழுதியமை தொடர்பில் நேற்று இந்தப் பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன்.

06

# சமஷ்டி, '13', தீர்வு என்று எதும் தருகின்றோம் எனக் கூறி தமிழர்களை அழைக்கக் கூடாது என்கிறார் அனுரகுமார



**நாட்டை கட்டியெழுப்பும் போது வடக்கு மக்களை அதிகார பரவலாக்கல் தொடர்பான தீர்வு குறித்து கூறி அழைக்கக் கூடாது எனவும், நாட்டில் நிலவும் பேரிடரில் இருந்து மீள ஒன்றாக இணைந்து போராடுவோம் என்று அழைக்க வேண்டும் எனவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

தேசிய மக்கள் முன்னணியின் ஓய்வுபெற்ற முப்படை அதிகாரிகளின் மாத்தறை மாவட்ட மாநாட்டில் ஞாயிறன்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

சமஷ்டியை தருகிறோம், 13 ஆவது திருத்தச் சட்டத்தை தருகிறோம் என்று நாம் வடக்கு மக்களை அழைக்கக்கூடாது. பேரிடரில் இருந்து மீள நாம் ஒன்றாக இணைந்து போராடுவோம் என்றே அழைக்க வேண்டும்.

இந்திய ஆட்சியாளர்கள் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தி முழு நாட்டினரையும் ஒன்றாக இணைக்கும் வரலாற்றை எழுதும் போது, இலங்கை மக்களுக்கு மோதலான வரலாறு குறித்து எழுத நேரிட்டுள்ளது.

குடியுரிமை சட்டத்தை கொண்டு வந்து மலையக மக்களை நாடற்றவர்களாக மாற்றிய போது, செல்வநாயகம் தமிழரசுக் கட்சியை உருவாக்க முன்வந்தார்.

1956 ஆம் ஆண்டு முதல் மொழிப் பிரச்சினை ஏற்படுத்தியதன் மூலம் 58 ஆம் ஆண்டு சிங்கள, தமிழ் கலவரம் ஏற்பட்டது. வடக்கு,கிழக்கில் ஸ்ரீ எழுத்தில் கிறீஸ் எண்ணெய் பூசும் நிலைமை உருவானது.

1970 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் வடக்கில் ஆயுதம் தாங்கிய அமைப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டாலும் 2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

எமது ஆட்சியாளர்கள் மோதல் வரலாற்றை உருவாக்கினாலும் இந்திய ஆட்சியாளர்கள் ஒற்றுமை என்ற வரலாற்றை உருவாக்கினர். – எனவும் அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# தற்போதைய நிலையில் ஆர்ப்பாட்டங்கள் செய்யாமல் எதிர்க்கட்சியினர் பொறுப்புடன் செயற்பட வேண்டும்!

## ஐ.தே.கவின் முன்னாள் எம்.பி. ஆஷுமாரசிங்க தெரிவிப்பு



**"இந்த வருடத்தில் பொருளாதார ரீதியில் நாட்டை ஸ்திரப்படுத்த தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துவரும்போது அதனைக் குழப்புவதற்கே ஐக்கிய மக்கள் சக்தி ஆர்ப்பாட்டம் மேற்கொண்டு வருகிறது. பொறுப்புவாய்ந்த எதிர்க்கட்சி என்றால் ஒரு போது இந்த சந்தர்ப்பத்தில் ஆர்ப்பாட்டம் செய்திருக்க மாட்டார்கள்."**

**- இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷுமாரசிங்க தெரிவித்தார்.**

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"2024 ஆம் ஆண்டு நாடு பொருளாதார ரீதியில் முன்னேறிச் செல்லும் வருடம். அதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை சகித்துக்கொள்ளாத எதிர்க்கட்சி தங்களின் வங்குரோத்து நிலையை மறைப்பதற்காக குறுகிய அரசியல் நோக்கில் மக்களை தூண்டி பொருளாதாரத்துக்கு பாதிப்ப ஏற்படுத்த முடியுமான முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். அதன் ஓர் அங்கமாகவே கொழும்பில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அத்துடன், உலகில் பல நாடுகள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டடிருந்தபோது, அந்த நாடுகளின் எதிர்க்கட்சிகள் தங்களின் நாட்டைப் பாதுகாத்துக் கொள்ள அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கியதன் மூலம் அந்த நாடுகள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று கிரீஸ், ஆர்ஜன்டீனா போன்ற நாடுகள் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் அந்நாட்டு எதிர்க்கட்சிகள் அதனை பயன்படுத்திக்கொண்டு அரசியல் லாபம் தேட முயற்பட்டதால் இன்னும் அந்த நாடுகள் வீழ்ச்சியடைந்தே இருக்கின்றன. அதனால் அந்த நாடுகளின் நிலைக்கு இலங்கை செல்லாமல் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்ததால் குறுகிய காலத்திலேயே எமக்கு பொருளாதார நெருக்கடியில் இருந்து ஓரளவு மீள முடியுமாகி இருக்கிறது.

அதனால், பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி என்றால், தற்போதைய நிலையில் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரசாங்கத்துக்கு தேவையான ஆதரவை வழங்க வேண்டும். ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளவும் உரிமைகளுக்காக போராட்டம் மேற்கெள்ளவும் அனைவருக்கும் உரிமை இருக்கிறது. ஆனால் நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அதேநேரம் வேலை நாளான நேற்றைய தினம் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் மக்களை கஷ்டத்துக்கு உள்ளாக்கி கொழும்பில் இவ்வாறு ஆர்ப்பட்டம் மேற்கொள்ள எடுத்த நடவடிக்கையை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி என்றால் இந்த வேலையைச் செய்திருக்க மாட்டார்கள்."– என்றார்.

# சிறைச்சாலை அலுவலர் உட்பட மூவர் கத்திக் குத்துத் தொடர்பாகக் கைது!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தரால் ரவுடிக் கும்பல் மூலம் கத்தியால் ஒருவர் குத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை உத்தியோகத்தர் உட்பட மூவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் இருந்து நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் திரும்பிய பஸ் இடையில் பழுதடைந்தபோது ஏறபட்ட சர்ச்சையில் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் தொலைபேசியில் சிலரை அழைத்து தனது வசிப்பிடமான மணியந்தோட்டத்தில் வைத்து மற்றொரு பயணியைக் கத்தியால் குத்தித் தாக்கிப் படுகாயப்படுத்திய சம்பவம் தொடர்பிலேயே மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கத்திக் குத்திற்கு இலக்கானவர் தொடரந்தும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். சிறைச்சாலை உத்தியோகத்தர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர். மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன.

# நான்கு கிலோ கேரள கஞ்சாவுடன் கிளிநொச்சியில் ஒருவர் சிக்கினார்

## இருவர் தப்பியோட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிளிநொச்சியில் நான்கு கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி விசேட அதிரடிப் படை அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வாகனத்தைச் சோதனையிட்ட அதிரடிப் படையினர் வானத்துக்குள் இருந்த நான்கு கிலோகிராம் கேரள கஞ்சா பார்சலை கைப்பற்றியுள்ளனர். அத்துடன் அவர்கள் சந்தேகத்தில் ஒருவரையும் கைது செய்து கிளிநொச்சி பொலிஸாரிடம்

ஒப்படைத்துள்ளனர்.

இதன்போது தப்பியோடிய இரண்டு சந்தேகநபர்களைத் தேடும் பணியில் விசேட அதிரடிப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸார் இது சம்பந்தமாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# கத்தியால் குத்தி ஒருவர் கொலை

## சுன்னாகத்தில் பயங்கரம்

யாழ்ப்பாணம் – சுன்னாகம் பகுதியில் நேற்று இருவரிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கொலையில் முடிவடைந்துள்ளது.

சுன்னாகம், கந்தரோடைப் பகுதியைச் சேர்ந்த சந்திரநாதன் கோபிராஜ் (வயது 36) என்பவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபருக்கும் மற்றைய நபருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றி கத்திக் குத்து நடத்தப்பட்டது.

கத்திக் குத்துக்கு இலக்காகியவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

கத்தியால் குத்திய நபரைச் சுன்னாகம் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# நிதி அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அரச நிறுவனங்களுக்கு அறிவிப்பு



நாட்டின் அனைத்து அரச நிறுவனங்களும் எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக தமது வருடாந்த நிதி அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் வருடாந்த நிதி அறிக்கையுடன் வெளியிடப்படவுள்ள கணக்காய்வாளரின் சாராம்ச அறிக்கை மேற்படி நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி. விக்ரமரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கணக்காய்வு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு 3 மாதங்கள் போதுமானது என கணக்காய்வாளர் நாயகம் கூறியுள்ளார்.

வருடாந்த நிதி அறிக்கையுடன் வெளியிடப்படவுள்ள கணக்காய்வாளரின் சாராம்ச அறிக்கை, மே 31 ஆம் திகதிக்கு முன்னதாக விநியோகிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# சமூக செயற்பாட்டாளர் பியத் நிகேஷல மறியல்

சமூக ஊடக செயற்பாட்டாளர் பியத் நிகேஷல இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சமூக ஊடக செயற்பாட்டாளர் பியத் நிகேஷல குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கணினி குற்ற விசாரணை பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக அவர் நேற்று முன்தினம் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், வாக்குமூலம் பெறப்பட்டதன் பின்னர் அவர் கைது செய்யப்பட்டார்.

பொதுமக்களின் அமைதியை சீர்குலைத்தமை, அரசாங்கத்தின் மீது பொதுமக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியமை, பொதுமக்களை ஆத்திரமடையச் செய்யும் வகையிலான காணொலிகளை வெளியிட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் பியத் நிகேஷலவை கைது செய்தோம் என பொலிஸார் தெரிவித்தனர்.




# ரி.ஐ.என். பெறாத நபர்களுக்கு அபராதம் விதிப்பது நிறுத்தம்!

ரி.ஐ.என். அல்லது வரி அடையாள எண்ணைப் பெறாத நபர்களுக்கு அபராதம் விதிப்பதை உள்நாட்டு இறைவரி திணைக்களம் இடைநிறுத்தியுள்ளது.

நிதியமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

18 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு குடிமகனும் வரி கோவையை ஆரம்பிக்க வேண்டியது கட்டாயம் என அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

ஜனவரி முதலாம் திகதி முதல் இந்த நடவடிக்கையை கட்டாயமாக்குவதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது.

உரிய வரி அடையாள எண்ணைப் பெறாதவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படும் என அப்போது அறிவிக்கப்பட்டது.

எனினும், இதனை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் காரணமாக, பெப்ரவரி முதலாம் திகதி முதல் அதனை கட்டாயமாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.





# உத்தேச நெல் கொள்வனவு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம்

உத்தேச நெல் கொள்வனவு வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2023/2024 பெரும்போக நெல் கொள்வனவிற்கான சலுகை வட்டி வீதத்தின் கீழ் அரச மற்றும் தனியார் வங்கிகள் ஊடாக கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, கடந்த 05 வருட கால போகங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பெற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான விளைச்சலை அடிப்படையாகக் கொண்டு கடன் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

உத்தேச கடன் திட்டத்தின் கீழ் 900 கோடி ரூபா கடன் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களுக்கு உயர்ந்தபட்சம் ஐந்து கோடி ரூபா கடனும், நெற்களஞ்சிய உரிமையாளர்கள் மற்றும் மொத்த நெல் கொள்வனவாளர்களுக்கு உயர்ந்தபட்சம் இரண்டரைக் கோடி ரூபா கடனும் வழங்கப்படவுள்ளது.

கடன் மீளச் செலுத்தும் காலப்பகுதி 180 நாள்களாகும். வருடாந்த வட்டி 15 வீதம் என்பதுடன், அதில் 4 வீதம் திறைசேரியால் பங்களிப்பு செய்யப்படும்.

# வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளராக மீள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்?

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளராக மீண்டும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த திலிப் லியனகேயை நியமிக்க மத்திய சுகாதார அமைச்சு இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.



வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளராகத் தற்காலிக இணைப்பின் பேரில் பணியாற்றிய பெரும்பான்மை இனத்தைச் செர்ந்த திலிப் லியனகே, யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் வைக்கப்பட்ட நயினாதீவு நாகபூசணி அம்மனின் திருவுருவச் சிலையை அகற்ற பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என நயினாதீவில் வைத்து பொலிஸாருக்கு இரகசியமாக அழுத்தம் கொடுத்தார் என்ற தகவல் பத்திரிகைகளில் வெளியானதால் ஏறபட்ட நெருக்கடிகளை அடுத்து அவசரமாக இடமாற்றப்பட்டார்.

இதனால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தியே பதில் கடமையாற்றிவரும் நிலையில் வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வெற்றிடத்திற்கு பகிரங்க விண்ணப்பம் கோரப்பட்டபோது நால்வர் விண்ணப்பித்தனர்.

இதில் வட மாகாணத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதிகளான சரவணபவன், வினோதன், உமாசங்கர் ஆகியோருடன் தெற்கைச் சேர்ந்த திலிப் லியனகே ஆகிய நால்வரும் விண்ணப்பித்தனர். விண்ணப்பித்த அனைவருக்கும் கடந்த வாரம் நேர்முகத் தேர்வும் இடம் பெற்றது.

இந்த நேர்முகத் தேர்வில் அதிக புள்ளிகளைப் பெற்றார் எனத் தெரிவித்து மீண்டும் நிரந்நரமாக திலிப் லியனகேயை வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளராக நியமிக்க இரகசிய முயற்சிகள் இடம்பெறுகின்றன என மத்திய சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழக முதல்வருக்குக் கடிதம் எழுதிப் பயனில்லை, இலங்கை அரசுடன் பேசி, அவர்கள் இலங்கை மீளுவதற்கான ஆவணங்களை விரைந்து தயார் பண்ணுவதே சரியான வேலை என்று குறிப்பிட்டிருந்தேன்.

நேற்று உடனடியாகவே இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சபரியுடன் சிறீதரன் எம்.பி. தொலைபேசி அழைப்பு எடுத்து இது குறித்துப் பேசி இருக்கின்றார் என அறிய வந்தது.

வெளிவகார அமைச்சர் அலி சப்ரி ஓர் இஸ்லாமியர். சுத்தத் தமிழில் அழகுறப் பேசக் கூடியவர். இயல்பாகவே எல்லோருக்கும் உதவும் குணம் கொண்டவர். தமிழரசு கட்சியின் தலைவராகத் தேர்வாகி இருக்கும் சிறீதரன் எம்.பியே நேரடியாகத் தொடர்பு கொள்ளும் போது சும்மா இருப்பாரா?

நேற்று இப்பத்தியில் நான் தெரிவித்த விடயங்களையே அவரும் சிறீதரனுக்கும் கூறினார் என்று அறிய வந்தது.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி மற்றும் ஆவணங்களுக்காகக் காத்திருக்கிறோம். அது கிடைத்ததும் சில நாள்களில் அவர்களை இலங்கைக்கு அழைத்து வரலாம் என்று நம்புகிறேன் என்ற சாரப்பட அலி சப்ரி பக்கத்திலிருந்து பதில் தரப்பட்டதாகத் தெரிகின்றது.

மேற்படி நால்வரில் ஒருவரான சாந்தனின் உடல் நிலைமை மோசமடைவது குறித்து நான்கு நாள்களுக்கு முன்னரே கொழும்பில் தமிழ் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் அமைச்சர் அலி சப்ரியுடன் தொடர்பு கொண்டு பேசினார். லண்டனில் இருந்த அமைச்சர் அலி சப்ரி தம்மாலான முயற்சிகளை விரைந்து எடுப்பார் என அந்தப் பத்திரிகை ஆசிரியருக்கு உறுதி அளித்தார் என்பதையும் அறிய முடிந்தது.

மூன்று தினங்களுக்கு முன்னர் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் பின்னர் தன்னுடன் இதுகுறித்து வலியுறுத்திப் பேசினார் என்று அலி சப்ரி நேற்று முன்தினம் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் மூன்று தினங்களுக்கு முன்னர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கொழும்பில் இருந்த போது, மேற்படி சாந்தன் ஆகியோரின் தமிழக சட்டத்தரணியான புகழேந்தி தொலைபேசி மூலம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டு, மேற்படி சாந்தன் உட்பட ஏனையோரை இலங்கைக்கு அனுப்புவது தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகள், நடவடிக்கைகள் குறித்துப் பேசினார்.

இந்தப் பின்னணியில் நேற்று முன்னிரவில் சாந்தனின் தாயார் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. தலைமை அலுவலகமான சிறீதர் தியேட்டரில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துப் பேசி இருக்கின்றார்.

சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதர் வெங்கடேஸ்வரன் மேற்படி நால்வருக்கும் உரிய ஆவணங்களை கொழும்பு அரசிடமிருந்து பெற்று கொள்வதற்கான முயற்சியை நமது நாட்டின் வெளிவிகார அமைச்சு ஊடாக பாதுகாப்பு அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்பு கொண்டு மேற்கொண்டு வருகிறார் என்றும் தெரிகிறது.

கடும் சுகவீனமுற்றிருக்கும் சாந்தனுக்கு எவ்வளவு விரைவாக இந்த ஆவணங்கள் மற்றும் இலங்கை மீளுவதற்கான அனுமதி ஆகியன கிடைக்கின்றனவோ, அப்போதுதான் தன் தாயாரை காணும் வாய்ப்பு அவருக்கு கிட்டும். அது விரைந்து கிடைக்கப் பிரார்த்திப்போம்...!

## இரு வெளிநாட்டவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாத்தறை பிரதான வீதியின் மிதிகம பகுதியில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

தனியார் பஸ்ஸூம் மோட்டார் சைக்கிளும் மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு வெளிநாட்டவர்களே விபத்தில் பலியாகியுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மிதிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கண்ணீர்ப் புகையால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்பட்டு அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முஜிபுர் ரஹ்மான் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி நேற்று முன்னெடுத்த ஆர்ப்பாட்டப் பேரணியின்போது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட கண்ணீர்ப்புகை, நீர்த்தாரைப் பிரயோகத்தால் பாதிக்கப்பட்ட கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பேரணியைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குச் சென்று முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களின் நலன் விசாரித்தார்.

## எதிரணியின் பேரணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்ப்புப் பேரணியில் கலந்துகொள்வதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கட்சியின் ஆதரவாளர்கள் கொழும்புக்கு வருகை தந்திருந்தனர்.

கொழும்பு விகாரமகாதேவி பூங்கா அருகில் இந்த எதிர்ப்புப் பேரணி ஆரம்பமானது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் இந்தப் பேரணி ஆரம்பமாகி முதல் 15 நிமிடங்களிலேயே ஆர்ப்பாட்டத்தின் மீது கண்ணீர்ப்புகையும், நீர்த்தாரைப் பிரயோகமும் இடம்பெற்றது. இந்தத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மீண்டும் பேரணியில் கலந்துகொண்ட ஆதரவாளர்களுடனும், கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகிதமும் கொழும்பு விகாரமகாதேவி பூங்கா பிரதான நுழைவாயில் முன்பாக எதிர்க்கட்சித் தலைவர் தலைவர் சஜித் பிரேமதாஸ பேரணி உரையை நிகழ்த்தினார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட தரப்பினருக்கு மூன்று நீதிவான் நீதிமன்றங்களால் நேற்று தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

கொழும்பில் வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் வகையில் செயற்பட வேண்டாம் எனவும், நிதி அமைச்சு, ஜனாதிபதி செயலகம், மத்திய வங்கி மற்றும் ஜனாதிபதி மாளிகை ஆகியவற்றுக்குள் உட்பிரவேசிப்பதைத் தவிர்க்குமாறும், பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்த வேண்டாம் எனவும் நீதிமன்ற உத்தரவுகளில் குறிப்பிடப்பட்டிருந்தன.

(ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆற்றிய உரை 14, 15 ஆம் பக்கங்களில்)











# சுகாதாரத் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு சுகாதார அமைச்சின் முன் நேற்று ஆர்ப்பாட்டம்



சுகாதார அமைச்சுக்கு முன்பாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பினர் நேற்று பிற்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, சம்பளம், கொடுப்பனவுப் பிரச்சினை உள்ளிட்ட சுகாதாரத் துறையில் உள்ள ஏனைய நெருக்கடிகளுக்கு தீர்வு காணுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

வைத்தியர்களுக்கான கொடுப்பனவை 35 ஆயிரம் ரூபாவினால் அதிகரிப்பது உள்ளடங்கலாக அனைத்து சுகாதார ஊழியர்களுக்கும் பொருளாதார நியாயத்தை வழங்குமாறு கோரி இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பொது சுகாதாரப் பரிசோதகர்கள், ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையிலுள்ள 72 தொழிற்சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பினர் இதில் கலந்துகொண்டனர்.

தேசிய வைத்தியசாலையிலிருந்து சுகாதார அமைச்சுக்கு முன்பாக இவர்கள் எதிர்ப்புப் பேரணியாக சென்றிருந்தனர்.

## ‘உரித்து’ வேலைத்திட்டம்:

# 10ஆயிரம் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி



மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவிற்கமைய, ‘உரித்து’ வேலைத் திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

மேற்படி காணி உறுதிப் பத்திரங்கள் தற்போதும் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் எச்.எம்.பீ.பீ ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தின் அதிகாரிகள், மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்களுடன் நேற்று தொழில்நுட்ப முறைமையினூடாக இடம்பெற்ற கலந்துரையாடலில் மேற்படி விடயம் குறிப்பிடப்பட்டது.

‘உரித்து’ வேலைத்திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக 10 ஆயிரம் காணி உறுதிப் பத்திரங்களை வழங்கி வைப்பதற்கான தேசிய நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் பெப்ரவரி 05 ஆம் திகதி ரங்கிரி தம்புளை விளையாட்டரங்களில் நடைபெறவுள்ளது.

உரித்து பத்திரங்களை பெற்றுக்கொள்வோரின் உணவு தேவைகளுக்கு அவசியமான நிதி மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு, அவர்கள் எவ்வித நெருக்கடியும் இன்றி நிகழ்வில் பங்கேற்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு மாவட்டச் செயலாளர்களுக்கு ஜனாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது.

‘உரித்து’ வேலைத்திட்டத்தின் கீழ் 20 லட்சம் விவசாயக் குடும்பங்களுக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்க அரசாங்கம் திட்டமிட்டிருப்பதோடு, அதற்காக வரவு – செலவு திட்டத்திலும் 2 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

காலனித்துவ ஆட்சியில் வெளிநாட்டவர்கள் இலங்கையில் கையகப்படுத்திய காணிகளை விவசாய நடவடிக்கைகளுக்காக உள்நாட்டவர்களுக்கு அனுமதி பத்திரங்கள் ஊடாக வழங்கியிருந்தனர்.

இருப்பினும் 1935 ஆம் ஆண்டில் காணி கட்டளைச் சட்டத்தின் ஊடாக உள்நாட்டவர்களுக்கு காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்காக மற்றுமொரு அனுமதி பத்திர முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் கீழ் காணிகளில் விவசாயம் செய்வதற்கும் வீடுகளை நிர்மாணிப்பதற்குமான அனுமதிகள் வழங்கப்பட்டன.

இருப்பினும் அந்தக் காணிகளை விற்பனை செய்தல் அல்லது வேறு தரப்பினருக்கு கைமாற்றுதற்கான உரித்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை என காணி ஆணையாளர் பந்துல ஜெயசிங்ஹ தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் சந்ரா ஹேரத், ஜனாதிபதி அலுவலகத்தின் சமூக சேவை பணிப்பாளர் பிரியந்த குமார உள்ளிட்ட பலரும் இந்த கலந்துரையாடலில் பங்கெடுத்தனர் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தாமதமாகும் நீதி

'தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடும்' என்பது சட்டத்துறை தொடர்பான ஒரு முதுமொழி.

பல சமயங்களிலும் அதுதான் இலங்கையில் நடைபெறுகின்றது. எனினும் தாமதித்தாவது நீதி வெளிப்படுத்தப்படுகின்றதே என்று அது குறித்துத் திருப்தி அடையலாம்.

அத்தகைய உத்தரவு ஒன்று இப்போது உயர் நீதிமன்றத்தில் இருந்து கிட்டியிருக்கின்றது.

2018ஆம் ஆண்டு ஒக்டோபர் 26ஆம் திகதி அப்போது நல்லாட்சி அரசின் பிரதமராக - நாடாளுமன்றத்தில் போதிய எம்.பிக்களின் ஆதரவுடன் - இருந்த ரணில் விக்கிரமசிங்கவை அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிரடியாக ஒரு வர்த்தமானி அறிவித்தல் மூலம் பதவி நீக்கி, நாடாளுமன்றப் பெரும்பான்மையை வைத்திராத மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக நியமித்தார்.

அப்போது அந்த நடவடிக்கைக்கு எதிராக, அதுவரையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பணியாற்றிய சமூக செயற்பாட்டாளரான ஓஷல் ஹேரத் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்ற பிரதமரை ஜனாதிபதி தம் இஷ்டப்படி பதவி விலக்க முடியாது, அப்படி விலக்கியமை அடிப்படை உரிமை மீறல் என்று தெரிவித்து இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அதேநேரம் தொடர்ந்து வந்த அரசியல் நெருக்கடிகளை அடுத்து, நாடாளுமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டார. அதனை ஆட்சேபித்து அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உயர்நீதிமன்றத்தில் மனுச் செய்தார். ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் அந்த மனு சார்பில் முன்னிலையாகி வாதாடினார். அந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட ஐந்து நீதியரசர்கள் கொண்ட உயர்நீதிமன்றம், நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிரகடனத்தை ஏகமனதாக ரத்துச் செய்து கட்டளை பிறப்பித்தது.

மஹிந்த ராஜபக்ஷவை குறுக்கு வழியில் பிரதமராக்கிய அந்தச் சர்ச்சை அத்தோடு முடிவுக்கு வந்தது. மீண்டும் ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார். 2020 வரை அவர் பதவியில் தொடர்ந்தார்.

அவரது அரசை 2018 ஒக்டோபரில் முறையற்ற விதத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலைத்தமைக்கு எதிராக அப்போதே தாக்கல்செய்யப்பட்டிருந்த மனு நீண்ட இழுபறிக்கு பின்னர் 5 ஆண்டுகள் கழித்து இப்போது - நேற்று முன்தினம் - மூன்று நீதியரசர்கள் கொண்ட ஆயத்தினால் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

அடிப்படை உரிமை மீறல் மனுக்களை உயர் நீதிமன்றம் அறுபது நாள்களுக்குள் விசாரித்துத் தீர்ப்பை - முடிவை - அறிவிக்க வேண்டும் என்பதுதான் அரசமைப்பின் அடிப்படைச் சட்ட ஏற்பாடாகும். அந்த விதிக்கு உயர்நீதிமன்றம் தனக்கு ஏற்ப விளக்கங்கள், வியாக்கியானங்கள் கொடுத்து, இப்போது அத்தகைய மனுக்களை இழுத்தடித்து வருகின்றமை இங்கு தொடர்கதையாகியுள்ளது.

ஓர் அடிப்படை உரிமை மீறல் மனுவை - அதுவும் அரசமைப்புக் கோட்பாடுகளுக்கு வியாக்கியானம் தருகின்ற சட்டப் பிரச்சினையையும் கொண்ட ஒரு சிக்கலை - விசாரணைக்கு ஏற்பதா என்பதைத் தீர்மானிக்க இலங்கையின் உயர்நீதிமன்றத்திற்கு ஐந்து ஆண்டுகளுக்கு மேல் தேவைப்பட்டிருக்கின்றது. இனியும் விசாரணை எவ்வளவு காலம் இழுபடுமோ தெரியாது.

இப்படியே நிலைமை போனால், அடிப்படை உரிமை மீறல் மனுக்களுக்கான நீதி பல சமயங்களில் மறுக்கப்பட்ட நீதியாகிவிடும் என்பது திண்ணம்.

தற்போது நடைமுறையில் இருக்கும் 1978 ஆம் ஆண்டின் அரசமைப்பு அது கொண்டுவரப்பட்ட காலங்களில் - 1980களின் முற்பகுதியில் - இவ்வாறான அடிப்படை உரிமை மீறல் மனுக்களின் மீது அறுபது நாள்களுக்குள் இறுதி தீர்ப்பு அல்லது முடிவு கூறும் ஒரு வேகம் இருந்தது. இப்போது அதே நீதித்துறை கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிவிட்டமைதான் பேரவலம்.

எது, எப்படி என்றாலும் தற்போது விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட வழக்கின் அடிப்படையில் அக்காலகட்டத்தில் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவிற்கும், பிரதமராகப் பொறுப்பேற்ற மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எதிர்மனுதாரர்கள் என்ற முறையில் நோட்டீஸ் அனுப்ப உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. இருவரும் இன்று முன்னாள் ஜனாதிபதிகள். அவர்கள் தமது பதவிக்காலத்தில் இழைத்த அல்லது இழைக்காமல் விட்ட ஒரு விடயத்துக்காக பதவி போன பின்னரும் பதில் கூற வேண்டிய கடப்பாட்டுக்கு உள்ளாகி இருக்கின்றார்கள். அது நீதிமன்றத்தால் முன்னெடுக்கப்படுகின்றது.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அந்தத் தேர்தல்கள் நடக்கவிருக்கையில் அவற்றுக்கான நிதியை, நிதி அமைச்சர் என்ற முறையில் வெட்டி, மக்களின் வாக்குரிமையைப் பிரயோகிக்க விடாமல் தடுத்து, ஜனநாயக விரோதமாகச் செயற்பட்டிருக்கின்றார். இது போன்ற செயல்கள் தொடர்பான பல விடயங்கள் உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இவை எல்லாவற்றிற்கும் அவரும் பதில் சொல்ல வேண்டிய காலம் வரும். என்ன, அதற்கு சற்றுத் தாமதமாகும். அவ்வளவுதான்.

# தமிழகத்தில் தொழில் தொடங்க உயர் சலுகைகள் அளிக்கிறோம்

## ஸ்பெயினில் முதல்வர் ஸ்டாலின் உறுதி

"தமிழகத்தில் தொழில் தொடங்குங்கள். அதற்கேற்ற சூழலையும், திறன்மிக்க மனிதவளம், உயர் சலுகைகளை அளிக்கிறோம். உலகிலேயே அதிகம் பேசப்படும் இரண்டாவது மொழியாகவும் 20 நாடுகளின் அதிகாரபூர்வ மொழியாகவும் விளங்கும் ஸ்பானிஷ் மொழி போலவே எங்களது தமிழ் மொழியும் பாரம்பரியம் மிக்கது."

– இவ்வாறு தமிழ் நாடு முதல்வர் ஸ்டாலின் ஸ்பெயினில் தெரிவித்துள்ளார்.

ஸ்பெயின் நாட்டில் நடைபெற்ற முதலீட்டாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

பழம்பெரும் வரலாறும் பாரம்பரியமும் பெற்ற இந்த நாடு போன்றே, வரலாற்றுப் பெருமை கொண்ட தமிழ் நாட்டின் சார்பாக இங்கு வந்து உங்களைச் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உலகிலேயே அதிகம் பேசப்படும் இரண்டாவது மொழியாகவும் 20 நாடுகளின் அதிகாரப்பூர்வ மொழியாகவும் விளங்கும் ஸ்பானிஷ் மொழி போலவே எங்களது தமிழ்மொழியும் பாரம்பரியம் மிக்கது. கிட்டத்தட்ட 5000 ஆண்டுகளுக்கும் மேல் பழமை வாய்ந்த இலக்கிய மரபைக் கொண்டுள்ள மொழி எங்கள் தமிழ் மொழி.

ஐரோப்பிய ஒன்றியத்தில், நான்காவது பெரிய பொருளாதாரமாக ஸ்பெயின் திகழ்வது போல, இந்தியாவின் இரண்டாவது பொருளாதாரமாக தமிழ்நாடு விளங்குகிறது. இந்த இரண்டு பொருளாதாரங்களுக்கும் நிறைய தொடர்புகள் உள்ளன.

ஸ்பெயினுடனான பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்திடும் விதமாக, உங்களுடைய முதலீடுகளை தமிழ் நாட்டில் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்காக நான் இங்கு வந்துள்ளேன்.




வாகனங்கள், மின்வாகனங்கள், மின்னணுக் கருவிகள், தோல் பொருள்கள், தோல் அல்லாத காலணிகள், ஆடைகள் போன்றவற்றின் உற்பத்தியிலும், தகவல் தொழில்நுட்பம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, உயர் மருத்துவ சேவைகள் போன்ற பல்வேறு துறைகளிலும் இந்தியாவின் முன்னணி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகின்றது.

இந்தத் துறைகளிலும், வான்வெளி மற்றும் பாதுகாப்பு, உயிர் அறிவியல் மற்றும் உயிரி தொழில்நுட்பம், மருந்துகள், உணவு பதப்படுத்துதல், உப்புநீக்கம் மற்றும் நீர் சுத்திகரிப்பு ஆகிய துறைகளில் உங்களின் மேலான முதலீடுகளை மேற்கொள்ளுமாறு, ஸ்பெயின் முதலீட்டாளர்களை நாங்கள் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தொழில்களைத் துவங்க வரும் முதலீட்டாளர்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்வதற்கு தமிழ்நாடு அரசு காத்திருக்கிறது. பல்வேறு தொழில்களை மேற்கொள்ள உகந்த சூழலையும் திறன்மிக்க மனிதவளத்தையும் உறுதி செய்வதோடு, பல்வேறு தொழில் கொள்கைளின் கீழ் உயர் சலுகைகளையும் அளிக்க உள்ளோம். எனவே தங்களது முதலீடுகளை தமிழ்நாட்டில் மேற்கொள்ள வேண்டும் என்று மீண்டும் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்." – என்றார்.

# அரசியல் பிரமுகர் படுகொலை: 15 பேருக்கு மரண தண்டனை



அரசியல் பிரமுகர் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் 15 பேருக்கு மரணதண்டனை விதித்து கேரள நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பாரதிய ஜனதா கட்சியின் மாநில குழு உறுப்பினரான ரஞ்சித் ஸ்ரீனிவாஸின் கொலை வழக்கிலேயே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ரஞ்சித் ஸ்ரீனிவாஸ் கடந்த 2021ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் திகதி மர்மக் கும்பலொன்றால் அவரது மனைவி, தாய் மற்றும் மகள் முன்னிலையில் படுகொலை செய்யப்பட்டார்.

இதனையடுத்து, இந்த சம்பவம் தொடர்பில் 15 பேரைப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இந்த வழக்கின் விசாரணைகள் கடந்த 2 வருடங்களாக இடம்பெற்று வந்த நிலையில், மேற்படி 15 பேருக்கு மரண தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

# பாகிஸ்தான் முன்னாள் பிரதமருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு அந்த நாட்டு நீதிமன்றம் ஒன்று 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

அரச இரகசியங்களை கசிய விட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் அவருக்கு இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் இந்த வழக்கில் மற்றுமொரு பிரதிவாதியான பாகிஸ்தானின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா மெஹ்மூட் குரேஷிக்கும் 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் இருந்து அனுப்பப்பட்ட இரகசிய தகவல்களை கசிய விட்டனர் என்று பிரதிவாதிகள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, பாகிஸ்தானில் பெப்ரவரி 8 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கான பிரசாரங்கள் சூடுபிடிக்க தொடங்கியுள்ளது.



இந்த நிலையில், பிரதமர் இம்ரான் கானுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து அந்த நாட்டு நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

# தகுந்த பதிலடி கொடுக்கப்படும்: ஈரானுக்கு பைடன் எச்சரிக்கை



சிரிய ஜோர்டான் எல்லையில் அமைந்துள்ள அமெரிக்க படைமுகாம் மீதான தாக்குதலுக்கு ஈரான் பொறுப்பேற்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி பைடன் தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலில் மூன்று அமெரிக்க இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடி கொடுக்க முடிவு செய்துள்ளோம். அவர்கள் ஆதரிக்கும் குழுக்களின் தாக்குதல்களுக்கு ஈரான் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

"இதைச் செய்தவர்களுக்கு அவர்கள் ஆயுதங்களை வழங்குகிறார்கள் என்ற அர்த்தத்தில் நான் அவர்களை பொறுப்பேற்குமாறு கூறுகிறேன்" என்று பைடன் நேற்று செய்தியாளர்களிடம் கூறினார்.

சிரிய,ஜோர்டான் எல்லையில் உள்ள அமெரிக்க தளம் மீதான ட்ரோன் தாக்குதலில் மூன்று அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டதுடன் மேலும் 40 இற்கும் அதிகமானோர் காயமடைந்திருந்தனர்.

அத்துடன் இந்த தாக்குதலுக்கு ஈரானின் ஆதரவு பெற்ற குழு ஒன்று உரிமை கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சூடானில் துப்பாக்கிச் சூடு: 54 பேர் பலி, 60 பேர் காயம்

சூடானின் அபேய் பகுதியில் ஆயுதங்களுடன் நுழைந்த சிலர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 54 பேர் உயிரிழந்துள்ளனர். 60 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தச் சம்பவத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

வட ஆபிரிக்க நாடுகளான சூடான் மற்றும் தெற்கு சூடான் எல்லையில் அமைந்துள்ள எண்ணெய் வளம் கொண்ட அபேய் பகுதியில் இரு நாடுகளும் ஆதிக்கம் செலுத்த விரும்புகின்றன.

இந்த நிலையில் கடந்த 2011 இல் சூடானில் இருந்து தெற்கு சூடான் சுதந்திரம் பெற்ற பின்பும், இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை.

அபேய் உரிமை தொடர்பாக பொது வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என ஆபிரிக்க யூனியன் பரிந்துரைத்தது. ஆனால் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் வாக்களிக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடுகள் நிலவி வருகின்றன. அபேய் பகுதி தற்போது தெற்கு சூடானின் கட்டுப்பாட்டில் உள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் தெற்கு சூடான் தன் படைகளை அபேய்க்கு அனுப்பியதில் இருந்து இரு நாடுகளின் எல்லை மோதல்கள் அதிகரித்துள்ளன.



இதன் காரணமாக, இங்கு ஐ.நா பாதுகாப்புப் படை இயங்கி வருகிறது. எனினும், இங்கு இனக்கலவரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு ஆயுதங்களுடன் நுழைந்த நபர்கள் சிலர் கிராம மக்கள் மீது துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர்.

இந்த துப்பாக்கிச்சூட்டில் ஐ.நா.வின் பாதுகாப்புப் படை வீரர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்பட 54 பேர் உயிரிழந்துள்ளனர். 60 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 12 லட்சம் குடும்பங்களை வலுவூட்டுவதற்குத் திட்டம்

## இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தகவல்



“புதிய கிராமம், புதிய நாடு, தொழில் முனைவு அரசு என்ற கருத்தின் கீழ், வறுமையில் உள்ள 12 லட்சம் குடும்பங்களை வலுவூட்ட எதிர்பார்த்துள்ளோம். ஜப்பான் மொழித்திறன் பரீட்சையில் சித்தியடைந்த 10 ஆயிரம் பேர் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படவுள்ளனர். மேலும் ஒரு லட்சம் பேருக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை இவ்வருடம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.”

– இவ்வாறு சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“20 லட்சம் பயனாளிகளுக்கு அஸ்வெசும என்ற சமூகப் பாதுகாப்பு நிவாரணத்தை வழங்குவதே இந்த ஆண்டு எமது முக்கியப் பணியாகும். “புதிய கிராமம், புதிய நாடு, தொழில் முனைவு அரசு“ என்ற கருத்தின் கீழ், வறுமையில் உள்ள 12 லட்சம் குடும்பங்களை வலுவூட்டவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வருடம் அதில் 3 லட்சம் பேரை வலுவூட்டும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன.

இதன்போது, பயனாளிகளுக்கு பணம் வழங்கும் செயல்முறைக்கு அப்பால், எமது முக்கிய நோக்கம் அவர்களை வலுவூட்டுவதாகும். அதற்காக தற்போதுள்ள பொறிமுறையை மாற்றவும் முடிவு செய்துள்ளோம். அந்த வகையில், வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளை வழங்கி வருகின்றோம். ஜப்பான் மொழித்திறன் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற 10 ஆயிரம் பேரை தொழிலுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பியுள்ளோம். மேலும் ஒரு லட்சம் பேருக்கு வெளிநாட்டு தொழில்களை வழங்குவதை இலக்காகக் கொண்டுள்ளோம்.

மேலும், பயனாளிகளுக்கு தொழில் முறை பயிற்சிக்கான ஏற்பாடுகளை வழங்க நாங்கள் தயாராக உள்ளோம். மேலும், விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் ஏற்றுமதிப் பயிர்களைப் பயிரிடவும் ஊக்குவித்து வருகின்றோம். வெளிநாட்டுச் சந்தையை இலக்காக கொண்டு, முக்கியமாக தேயிலை, கறுவா மற்றும் மிளகு உள்ளிட்ட பயிர்கள் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தொழில்முனைவு நிதியம் ஒன்றை ஆரம்பிக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மேம்படுத்தப்பட வேண்டும். அதன்படி, சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமையாளர்கள் சுமார் 25 ஆயிரம் பேருக்கும் மேற்பட்டோருக்கு அவர்களின் சேவையின் அடிப்படையில் பதவி உயர்வு வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவர்களில் சுமார் 2 ஆயிரம் பேருக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் பதவி உயர்வு வழங்கப்படும்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தை நலன்புரிப் பணிகளுக்காக மாத்திரம் செயற்படும் நிறுவனமாக இல்லாமல் தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் நிறுவனமாக மாற்றுவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாகும். அதே போன்று, இளைஞர் சமூகத்தை மேலும் தொழில் பயிற்சிக்கு உட்படுத்துவதற்கு சீனாவுடன் மூன்று ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.”

– என்றார்.



# அரச நிறுவனங்களிலுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சட்ட ரீதியான ஏற்பாடுகளை அறிமுகம் செய்ய அனுமதி

அரச நிறுவனங்களுக்கிடையே ஏற்படுகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்காக சட்ட ரீதியான ஏற்பாடுகளை அறிமுகம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரச நிறுவனங்களுக்கிடையே மேலெழுகின்ற பிணக்குகளைத் துரிதமாகத் தீர்ப்பதற்கு இயலுமாகும் வகையில் பொருத்தமான ஏற்பாடுகளை அறிமுகம் செய்வதன் தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்டமா அதிபரிடம் வினவி அதற்கான சட்டமூலத்தை தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.





# மன்னார் மாவட்டத்தில் 705 மத ஸ்தலங்களில் 174 மத ஸ்தலங்கள் பதிவு செய்யப்படவில்லை

(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள 705 மத வழிபாட்டு ஸ்தலங்களில் 174 மத வழிபாட்டுத் ஸ்தலங்கள் பதிவு செய்யப்படவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

மாவட்டச் செயகத்திற்குச் சமர்ப்பித்த தகவல் அறியும் சட்டத்தின் கீழான விண்ணப்பத்திற்குக் கிடைத்த பதிலிலேயே மேற்படி எண்ணிக்கை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய பதிவு செய்யப்பட்ட 64 பள்ளிவாசல்களும் பதிவு செய்யப்படாத 64 பள்ளிவாசல்களும் உள்ளன. இதில் முசலிப் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட 22 பள்ளிவாசல்கள் உள்ளபோதும் பதிவு செய்யப்படாமல் 33 பள்ளிவாசல்கள் உள்ளன. மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட 21 பள்ளிவாசல்களும் பதிவு செய்யப்படாமல் 19 பள்ளிவாசல்களும் உள்ளன.

கிறிஸ்தவ தேவாலயங்களில் 285 தேவாலயங்கள் பதிவு செய்யப்பட்டவையாகவும் 66 தேவாலயங்கள் பதிவு செய்யப்படாதவையாகவும் உள்ளன. இதிலே மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் 101 தேவாலயங்கள் பதிவு செய்யப்பட்டவையாகவும் 45 தேவாலயங்கள் பதிவு செய்யப்படாத வையாகவும் உள்ளன.

சைவ ஆலயங்களில் 176 ஆலயங்கள் பதிவு செய்யப்பட்ட ஆலயங்களாகவும் 44 ஆலயங்கள் பதிவு செய்யப்படாத ஆலயங்களாகவும் மாவட்டத்தில் காணப்படுகின்றன. இதிலே மாந்தை மேற்கு மற்றும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுகளில் தலா 15 ஆலயங்கள் பதிவு செய்யப்படாது உள்ளன என மாவட்டச் செயலகம் தெரிவிக்கின்றது.

இதேபோன்று 6 பௌத்த ஆலயங்களும் மாவட்டத்தில் காணப்படுகின்றபோதும் இவை பதிவு செய்யப்பட்டவையா இல்லையா என உறுதிப்படுத்தப்படவில்லை.

இவற்றின் அடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் காணப்படும் 705 மத வழிபாட்டுத் ஸ்தலங்களில் 174 மத வழிபாட்டுத் ஸ்தலங்கள் பதிவு செய்யப்படாதமை உறுதி செய்யப்பட்டுள்ளது.



# பெலியத்தவில் ஐவர் சுட்டுக் கொலை: மேலும் இரு சந்தேகநபர்கள் கைது!

பெலியத்த பகுதியில் 5 பேர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி கொலைகளுக்கு உதவிகளை வழங்கிய குற்றச்சாட்டில் அவர்கள் கைதாகியுள்ளனர்.

பூஸா மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 57 மற்றும் 27 வயதுடைய மேற்படி சந்தேகநபர்கள் ஹங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பெலியத்த பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி இரண்டு சந்தேகநபர்களுடன், இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் மொத்தமாக 8 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# மாணவர் நாடாளுமன்றங்களின் ஊடாக திறமைசாலிகள் உருவாகி வருகின்றனர்

## ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவிப்பு

"எதிர்காலத்தில் நாட்டுக்கு சரியான அரசியல் தலைமைத்துவத்தை வழங்கக்கூடிய திறமையானவர்கள் குழுவொன்று மாணவர் நாடாளுமன்றங்கள் ஊடாக உருவாகி வருகின்றது."

– இவ்வாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

குருநாகல் மலியதேவ வித்தியாலய மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து உரையாற்றும் போதே ஜனாதிபதியின் செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

குருநாகல் மலியதேவ வித்தியாலய மாணவர் நாடாளுமன்றத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்று பழைய நாடாளுமன்றமான தற்போதைய ஜனாதிபதி செயலகத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் இலங்கை நாடாளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்து இந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உரையாற்றுகையில் –

"மாணவர் நாடாளுமன்றத்தின் முதல் அமர்வை பழைய நாடாளுமன்றத்தில் நடத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்க முடிந்தமை குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். இதுவரை பல பாடசாலைகளுக்கு அந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. இன்று பிரதமர் பதவியிலுள்ள மாணவர் அமர்ந்திருந்த ஆசனத்தில்தான் அன்று பிரதமர் டி. எஸ்.சேனாநாயக்க அமர்ந்திருந்தார். 1982 ஆம் ஆண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டைக்கு நாடாளுமன்றம் மாற்றப்படும் வரை நீங்கள் இருக்கும் இந்த இடத்தில்தான் நாடாளுமன்றம் கூடியது. காலி நாடாளுமன்ற உறுப்பினர் விஜயானந்த தஹநாயக்க இந்த இடத்தில்தான் ஒன்றரை அல்லது இரண்டு நாள்கள் தொடர்ச்சியாக உரை நிகழ்த்தினார்.

குருநாகல் மாவட்டம் என்பது அபிவிருத்தியிலும் கல்வியிலும் மிக உயர்ந்த மட்டத்தில் இருக்கும் மாவட்டம் என்றே கூற வேண்டும். அந்த மாவட்டத்தின் எதிர்காலத்தை வழிநடத்திச் செல்வதற்கும் அதற்குத் தலைமை தாங்கவும் அதற்காக அமைச்சர் பதவிகளை வகிக்கவும் ஒரு குழு தயாராகி வருவதை உங்கள் மூலம் நான் காண்கிறேன். எதிர்காலத்தில் குருநாகல் மாவட்டத்தின் அரசியல் தலைமைத்துவத்தை ஏற்று நாட்டை வழிநடத்த உங்களுக்கு பலமும் தைரியமும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்." – என்றார்.











# தேர்தல் மூலமே நாங்கள் ஆட்சிக்கு வருவோம் இந்த அரசாங்கத்திற்கு முதுகெலும்பு இல்லை

## கொழும்பு ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

"தேர்தல் மூலமே நாம் ஆட்சிக்கு வருவோம். தற்போதைய அரசாங்கத்திற்கு முதுகெலும்பு இல்லை. அவ்வாறு முதுகெலும்பு இருந்தால் தேர்தல் ஒன்றை நடத்துங்கள். எங்களிடம் டீல் இல்லை."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிரான ஆர்ப்பாட்டம் நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இதனையடுத்து கொழும்பு விகாரமகாதேவி பூங்கா பிரதான நுழைவாயில் முன்பாக எதிர்க்கட்சித் தலைவர் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆற்றிய பேரணி உரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நீதிமன்ற தடையுத்தரவு பிறப்பித்த பாதைகளில் நாங்கள் பேரணி நடத்தவில்லை. நாம் சட்டத்தை மீறி செயற்படவில்லை. வேறு எதுவும் எங்களுக்கு வேண்டாம். எங்களுக்குத் தேர்தலே வேண்டும்.

அரசியல் ரீதியிலான டீல்கள் மூலம் அன்றி மக்கள் அனுமதியுடனயே ஆட்சிக்கு வருவோம். மக்கள் ஆசிர்வாதத்தின் ஊடாகவே நாம் ஆட்சிக்கு வருவோம் என்பதை இந்த ரணில் – ராஜபக்ஷ அரசாங்கத்திடம் கூறுகிறோம்.

ரணில் – ராஜபக்ஷ அரசாங்கம் மக்கள் வெள்ளத்திற்கு பயந்து விட்டது. இது கோழைத்தனமான அரசாங்கமாகும். இது முதுகெலும்பு இல்லாத அரசாங்கம். மக்களுக்குப் பயந்த அரசாங்கம், இன்று காலை ரணில் – ராஜபக்ஷ அரசாங்கத்தின் சில கைப்பொம்மைகள் நீதிமன்றம் சென்று, சில பிரதேசங்களுக்கு தடையுத்தரவுகளைக் கோரினர்.

ஆனால், நாங்கள் சென்றது, நாங்கள் நடு வீதியில் பேரணி சென்றது, சட்டத்தை மீறியல்ல. தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அல்ல. நாங்கள் சட்டத்தை மீறவில்லை.

இவ்விடத்திற்கு ஒன்று திரண்ட பல்லாயிரக்கணக்கான மக்களின் அடிப்படை உரிமைகளை, மனித உரிமைகளை, வேண்டுமேன்றே மீறினர்.

தொடர்ச்சி▼





# தேர்தல் மூலமே நாங்கள் ஆட்சிக்கு வருவோம்
# இந்த அரசாங்கத்திற்கு முதுகெலும்பு இல்லை

தொடர்ச்சி▲

ரணில. – ராஜபக்ஷ அரசாங்கத்தின் ரணிலுக்கும் மஹிந்தவிற்கும் முது கெலும்பு இருந்தால் மக்கள் மத்தியில் வருமாறு அழைப்பு விடுக்கிறோம்.

ரணில் – ராஜபக்ஷ அரசாங்கம் கண்ணீர் புகைக் குண்டு கொண்டு தாக்குதல் நடத்தினர். ஆனால் நாங்கள் தாக்குதல் நடத்துவது வெடி குண்டு, வாள், மெஷின் கன் துப்பாக்கி மூலம் அல்ல.

தேர்தல் ஊடாக நாம் அரசாங்கத் திற்கு பாடம் புகட்டுவோம். இதுதான் அரச பயங்கரவாத்தின் அடையாள மாகும். அடக்குமுறை, மிலேச்சத்தனம் மூலம் அரசாங்கம் மக்களை அதல பாதாளத்தில் தள்ளியுள்ளது.

எனவே இந்த மோசமான அரசாங் கத்தை வீட்டுக்கு அனுப்ப 220 லட்சம் மக்கள் தயாராகுங்கள். நாங்கள் ரணி லுடனோ ராஜபக்ஷவுடனோ டீல் இல்லை. மேடையில் எதிராக பேசிவிட்டு இரவில் டீல் போடும் இரட்டை நிலைப்பாட்டை யுடைய அணியல்ல ஐக்கிய மக்கள் சக்தி.

நாட்டை வங்குரோத்தடைய செய்த கும்பலை எமது ஆட்சியில் சட்டத்திற்கு கொண்டுவந்து நீதிமன்றத்தின் ஊடாக 220 லட்சம் மக்களுக்கு நீதியை நிலை நாட்டுவோம்.

அதற்கு தயாராகுங்கள். ஐக்கிய மக்கள் சக்தியின் புத்திஜீவிகள் மன்றம் மற்றும் சட்டத்தரணிகள் தாக்கல் அடிப் படை உரிமை மனு ஊடாக நாட்டை வங்குரோத்து அடைவதற்கு ராஜபக்ஷ் குடும்பமும் ஒரு சில அதிகாரிகளுமே பொறுப்பு என தீர்ப்பளிக்கச் செய்தோம்.

அரச அதிகாரத்தை பெற முன்னர் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டே இந்தத் தீர்ப்பை பெற்றோம். இந்தத் தீர்ப்பை அடிப்படையாக கொண்டு நாட்டை வங்குரோத்து அடைய செய்த வர்களிடம் இருந்து இழப்பீட்டைப் பெற்று உயிரிழந்த, ப திக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்டுவோம். ஆட்சியை விரட்டியடிக்கும் இந்த ஆரம்பப் பயணத் தில் இணைந்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

இன்று நடத்தப்பட்ட தாக்குதல் சட்டவிரோதமானது. போராடுவதற்கு அரசமைப்பில் எமக்கு உரிமை உள்ளது. ரணில் – ராஜபக்ஷ அரசாங்கமே வெட்கக்கேடு. அத்துடன் ஜனாதிபதி உட்பட அனைத்து மாளிகைகளையும் தகவல் தொழில்நுட்ப பல்கலைகழகமாக மாற்றுவோம்"– என்றார்.







# இன்றைய ராசி பலன்கள் - 31.01.2024

## மேஷம்

இன்றைய நாள் சிறப்பாக இருப்பதைக் காண்பீர்கள். உங்கள் வளர்ச்சிக்கான முக்கிய முடிவுகளை இன்று எடுப்பீர்கள். புதிய மனிதர்களுடனான தொடர்புகள் இன்று ஏற்படும்.

உங்கள் பணியில் வளர்ச்சி ஏற்படுத்துவீர்கள். உங்கள் முயற்சிக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

இன்று உங்கள் துணையிடம் உங்கள் அன்பை / காதலை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு ஏற்படும்.

உங்களின் கையிருப்பு பணம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். அதனைக் கொண்டு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் நம்பிக்கை உணர்வு காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## ரிஷபம்

புத்திசாலித்தனமாக திட்டமிடுவதன் மூலம் இன்று வெற்றி காணலாம். ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம வழிபாடு உங்களை தீங்கிலிருந்து காப்பாற்றும்.

உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காதது போல உணர்வீர்கள். நீங்கள் நேர்மறையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

சில முக்கிய பிரச்சினைகளை கையாள வேண்டியிருக்கும்.உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது உதவிகரமாக இருக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை பாதிப்பை ஏற்படுத்தும். இன்று சூழ்நிலையை சமாளிப்பதை கடினமாக உணரவீர்கள். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று செரிமானக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது. வெளியிடங்களில் உணவு உண்பதை தவிர்க்கவும்.

## மிதுனம்

நீங்கள் செயல்களை முன்னுரிமைப்படி ஆற்ற வேண்டும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய நீங்கள் இன்னும் முயல வேண்டும்.

இன்று நல்ல பலன்களைக் காண நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும். இதன் மூலம் நீங்கள் அதிகப்படியான பணிகளை சமாளிக்க முடியும்.

உங்கள் உணர்ச்சிப் பூர்வமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். உங்கள் வீட்டை புனரமைப்பதற்கு பணத்தை பயன்படுத்துவீர்கள். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று தோல் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உண்பதை தவிர்க்கவும்.

## கடகம்

இன்று அதிகப்படியான செயல்கள் காணப்படும். அவைகளை முன்னுரிமைப்படி ஆற்ற வேண்டும்.

நீங்கள் தொழில் சார்ந்த அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உங்கள் மேலதிகாரிகள் உங்கள் பணியைப் பாராட்டுவார்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் சகஜமாக நடந்து கொள்ள வேண்டும். இருவரும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பீர்கள். உங்கள் வங்கியிருப்பு உயரக் காண்பீர்கள். இன்று புதிய முதலீட்டிற்கு திட்டமிடுவீர்கள்.

உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## சிம்மம்

மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் தொடர்பாடலில் பிரச்சினை காணப்படும். நீங்கள் எடுக்கும் முடிவுகளில் கவனம் தேவை.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. அதன் காரணமாக பதட்டம் ஏற்படும். உங்கள் வளர்ச்சி பாதிக்கப்படும்.

உங்கள் நேர்மை மற்றும் உண்மை காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். இதனால் உறவில் நல்லிணக்கமும் மகிழ்ச்சியும் காணப்படும்.

தேவையற்ற சில விஷயங்களுக்கு பணம் செலவு செய்ய நேரும். அதனால் இன்று சிறிய அளவிலான கடன் வாங்குவீர்கள்.

பதட்டம் மற்றும் ஓய்வின்மை காரணமாக இன்று களைப்பாக உணர்வீர்கள்.இன்று உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## கன்னி

இன்று உங்கள் திறமை மற்றும் அறிவை வளர்த்துக் கொள்ளும் நாள். அதே சமயத்தில் உங்கள் மனதை அமைதியாக வைத்துக் கொண்டு செயல்பட வேண்டும்.

நீங்கள் பணயில் வெற்றி காண பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். இல்லாவிடில் வெற்றி காண்பது அரிது. பணியில் வெற்றி காண அதனை முன்கூட்டி அறிந்து வைத்திருப்பது நல்லது.

நட்பான பேச்சின் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ள முடியும். ஆனால் அது அவ்வளவு எளிதன்று. உணர்ச்சிவசப்படும் நிலை உறவின் இனிமையை பாதிக்கும்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவில் இன்று பணம் சேமிக்க இயலாது.

## துலாம்

இன்று உங்கள் செயல்களுக்கு தக்க பலன்கள் கிடைக்காது. இது உங்களுக்கு சிறிது ஏமாற்றத்தை அளிக்கும். பொறுமையும் நேர்மறை அணுகுமுறையும் அவசியம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும் இன்று தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். ஆரோக்கியமான உறவை பராமரிக்க இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் செய்ய நேரும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினையால் பாதிக்கப்படுவீர்கள். ஆரோக்கியமாய் இருப்பதற்கு எண்ணெய் மற்றும் கார உணவு வகைகளை தவிர்க்கவும்.

## விருச்சிகம்

இன்று உங்களுக்கு சிறிது அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் தந்தையின் ஆதரவு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் பணிகளை விரைந்து முடிக்க நீங்கள் புத்திசாலித்தனத்துடன் செயல் பட வேண்டும். உங்கள் திறமையும் நேர்மையும் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் அணுகுவது சிறந்தது. இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பு கணிசமாக உயரும். பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 31.01.2024




இன்று சிறிது தடைகளுக்குப் பின் வெற்றியைக் காண்பீர்கள். என்றாலும் சிறப்பாக திட்டமிடுவதன் மூலம் மட்டுமே இன்று நீங்கள் எதிர்பார்க்கும் வெற்றியைக் காண முடியும்.

கடின உழைப்பு மூலம் நீங்கள் இன்று வெற்றி பெற இயலும். உங்கள் பணிகளை விரைவில் முடிக்க நீங்கள் திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து நட்பாக பழகுவதன் மூலம் சிறந்த புரிந்துணர்வு ஏற்படுத்தலாம். இதன் மூலம் நல்லுறவும் உறவில் திருப்தியும் ஏற்படும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் காணப்படும். எதிர்பாராத வகையில் பண வரவு காணப்படும்.

முறையாக ஓய்வெடுப்பதன் மூலம் நீங்கள் புத்துணர்ச்சியுடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள். கால் மற்றும் தொடைகளில் வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று சவால்கள் நிறைந்து காணப்படும். பொறுமையாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் தவறுகளை அடுத்தவர் சுட்டிக் காட்டாமல் இருக்க பணிகளை ஆற்றும் பொழுது கவனம் தேவை.

குடும்ப பிரச்சினைகள் காரணமாக உறவில் குழப்பம் ஏற்படலாம். இதனால் உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். பயணத்தின் போது பண இழப்பு நேரலாம்.

ஒவ்வாமை காரணமாக சளி ஏற்படலாம். இதனால் உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




முறையான முயற்சி உங்கள் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற உதவும். பலன்கள் உங்களுக்கு சாதகமாக இல்லாவிட்டாலும் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். நண்பர்களின் தொடர்பு உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் பணிகளை முடிக்க நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். ஆனால் நீங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது உங்கள் பணிகளை ஆற்றும் பொழுது கவனம் தேவை.

உறவில் சிறிது அனுசரித்துப் போவது சிறந்த பலனைத் தரும். உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க இது உதவும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். என்றாலும் பணத்தை சம்பாதிக்க வேண்டும் மற்றும் சேமிக்க வேண்டும் என்ற ஆவல் உங்களிடம் இருக்கும்.




உங்கள் திறமைகளை வெளிப்படுத்த இது உகந்த நாள். பழைய நண்பர்களை சந்திப்பது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை அளிக்கும்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். பணியில் சாதிக்க வேண்டும் என்ற விருப்பம் இருக்கும்.

நம்பிக்கையான எண்ணங்கள் மற்றும் செயல்கள் மூலம் இன்றைய நாளை நீங்கள் உற்சாகமாக்கிக் கொள்ளலாம். இந்த உணர்ச்சி உறவின் சுணக்கங்களை நீக்கி விடும்.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் சேர்க்கும் வாய்ப்பு உள்ளது. அதன் மூலம் வரும் பணத்தை சேமிப்பீர்கள்.

வயிறு உப்பசம் காரணமாக இன்று அசௌகரியமாக உணர்வீர்கள். உணவில் கவனம் தேவை.




